தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 89/2022 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | இளங்கோவன் | | | |
| **Date** | **:** | **12.11.2024** | | | |
| **Time** | **:** | **4.05 p.m to 4.29 p.m** | | | |

தொ.த.சா.1. திரு.இளங்கோவன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

தொ.சா.ஆ.4 குற்றச்சாட்டு குறிப்பாணையில் கே.பி.எம்.ஜி நிறுவனத்தின் ஆய்வு அறிக்கையின் நகல் இணைக்கப்பட்டதாக சொல்லப்பட்டது எனக்கு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அது என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.1 ஆகும். 26.12.2020 தேதியிட்ட விளக்ககடித்தத்தை நான் கொடுத்தேன் என்றால் ஆமாம். பின்னர் நிர்வாகமானது என்னை தற்காலிக பணியிடை நீக்கம் செய்தார்கள் என்றால் ஆமாம். 26.12.2020 தேதியிட்ட கடிதம் முன்னிலைக்கு நான் விளக்கம் அளித்தேன் என்றால் ஆமாம் அந்த விளக்கமானது ஏற்றுக்கொள்ள தக்க ரீதியில் இல்லை என தெரிவித்து நிர்வாகம் 27.12.2020 தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவித்தார்கள் என்றால் தெரியாது. நான் அரும்பாக்கத்தில் வசித்து வந்தேன் என்றால் ஆமாம். என் சொந்த ஊராகும். 30.12.2020 அன்று நிர்வாகம் எனக்கு கே.பி.எம்.ஜி ஆய்வு அறிக்கை நகலை தமிழாக்கம் செய்து கொடுத்தார்கள் என்றால் ஆமாம். 30.12.2020 கடிதம் நி.சா.ஆ.2. ஆய்வறிக்கையின் தமிழாக்க நகல் நி.சா.ஆ.3. எனக்கு எதிராக உள்துறை விசாரணை நடைபெற்ற அதில் நான் முழுமையாக கலந்து கொண்டேன் என்றால் ஆமாம். எனக்கு உதவி செய்ய சக தொழிலாளியாக யார் கலந்து கொண்டார்கள் என்றால் யாரையும் நான் வைத்துக்

கொள்ளவில்லை. உள்துறை விசாரணை முடிவுற்று அந்த விசாரணையில் நான் குற்றவாளி என முடிவு செய்யப்பட்டு அது சம்பந்தமான என்னுடைய விளக்கத்தை கேட்டு நிர்வாகம் கடிதம் அனுப்பியது என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூல சாட்சியம் பத்தி 4,6,7 ல் சொல்லி உள்ளவை முதல் நிலை விசாரணைக்கு தேவையற்றது என்றால் இல்லை. நான் உள்துறை விசாரணையின் போது நிர்வாக தரப்பில் ஆவணங்கள் சாட்சிகள் மூலமாக பதிவு செய்யப்படாமல் நிர்வாக பிரதிநிதி மூலம் குறியீடு செய்யப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் வாய்மொழி ஆட்சேபணை தெரிவித்தேன் எழுத்து மூலமாக தெரிவிக்கவில்லை. 04.02.2021 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தான் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றாலும் அன்றைய தின விசாரணையில் நான் கலந்து கொண்டு அவை குறியீடு செய்யப்படுவதற்கு ஆட்சேபணை தெரிவிக்காமல் பெற்று இருக்கிறேன் என்றாலும் அன்றைய தினம் என்னிடம் ஆவணங்கள் மட்டும் ஒப்படைக்கப்பட்டு கையெழுத்து பெறப்பட்டு அடுத்த தேதியில் விசாரணை நடைபெறும் என்று சொல்லி அனுப்பினார்கள். சக தொழிலாளியை அழைத்து வரச் சொல்லி என்னிடம் விசாரணை அதிகாரி சொல்லி இருந்தார் என்றால் ஆமாம். 12.02.2021 அடுத்த விசாரணை நடைபெற்றது என்றால் ஆமாம். அன்றைய தினமும் நான் சக தொழிலாளியை என்னுடன் அழைத்து வரவில்லை என்றால் ஆமாம். நிர்வாகமானது அறிவிப்பு பலகையில் விசாரணைக்கு சக தொழிலாளிகள் யாரும் செல்லக்கூடாது என அச்சுறுத்தும் வகையில் தெரிவித்திருந்தார்கள் எனவே சக தொழிலாளியை நான் என்னுடன் அழைத்து செல்லவில்லை. அந்த அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்ட அறிவிப்பை நான் தாக்கல் செய்யவில்லை அந்த அறிவிப்பை நான் பார்க்கவில்லை சக தொழிலாளிகள் தான் அந்த விவரத்தை என்னிடம் சொன்னார்கள். சக தொழிலாளியாக இருக்க யாரை அழைத்தேன் என்றால் சதீஷ், மகேஷ், கௌதம், சிவப்பிரகாசம் மற்றும் சிலரை அழைத்தேன். மேற்படி நபர்களை அழைத்தபோது அவர்கள் நிர்வாகத்தின்

அச்சுறுக்களால் பயந்து கொண்டு வரவில்லை என்ற சங்கதியை விசாரணையின் சமயத்தில் சொல்லி உள்ளேன்னா அல்லது பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் பொதுவாக விசாரணை முறையாக நடைபெறவில்லை என தெரிவித்துள்ளேன். சக தொழிலாளியை அழைத்து அவர்கள் அச்சுறுத்தல் காரணமாக வரவில்லை என்ற விவரத்தை பத்தி 12 ல் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் அவ்வாறு சொல்ல இயலாது சொன்னால் தொழிலாளர்களுக்கு பிரச்சனை ஏற்படும். மேற்படி குற்றச்சாட்டுகளை நான் தற்சமயம் தான் முதன் முதலில் முன்வைக்கிறேன் என்றாலும் அது சம்பந்தமாக என்னுடைய பிரமாண வாக்குமூல சாட்சியத்திலோ கோரிக்கை மனுவிலோ சொல்லவில்லை என்றாலும் ஆமாம். 12.02.2021 அன்று நடந்த விசாரணையின் போது சக தொழிலாளி தேவையில்லை நானே விசாரணையை நடத்திக் கொள்கிறேன் என சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அது சம்பந்தமாக கடிதம் கொடுத்தேன் என்றால் ஆமாம். நிர்வாக தரப்பு சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டு நான் அவர்களை முழுமையாக குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் ஆமாம். ஆனால் சில கேள்வி பதில்களை விசாரணை அதிகாரி பதிவு செய்யாமல் விட்டுவிட்டார். எந்த கேள்வி பதில்களை பதிவு செய்யவில்லை என்பது சம்பந்தமான விளக்கத்தினை விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா அல்லது நிர்வாகம் எனக்கு இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பிய சமயத்தில் கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக சொன்னேன் எழுத்து மூலமாக சொல்லவில்லை. அது சம்பந்தமாக என்னுடைய கோரிக்கை மனுவிலும் பிரமாண வாக்குமூல சாட்சியதிலும் சொல்லவில்லை என்றால் ஆமாம். உள்துறை விசாரணையானது வீடியோ கான்பரன்ஸ் மூலமும் நடைபெற்றது என்றால் ஆமாம். விசாரணையின் போது தொலைபேசி உரையாடல் சிடி வடிவில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். விசாரணை என்பது தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் எனக்கு வழங்கப்பட்டன என்றால் ஆமாம். ஒரு சில ஆவணங்கள் விசாரணை தொடங்குவதற்கு

முன்பும் சில ஆவணங்கள் விசாரணையின் போதும் வழங்கப்பட்டது. எனக்கு எதிரான உள்துறை விசாரணையானது எனக்கு முழுமையான வாய்ப்பு அளிக்கப்பட்டு இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டுதான் நடத்தப்பட்டது என்றாலும் நான் பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் சொல்லி உள்ள சங்கதிகள் தவறானவை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:12.11.2024